பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1986) நிறை வேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஔ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (1986) (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு: தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிதுள்ளார்கள்.

7, அரசினர் சட்ட முன்வடிவுகள் தொடர்ச்சி.

(அஅஅ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத் தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)**ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

---

* 1936ஆம் ஆண்டு......தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெட்டுள்ளது.

4. 1986ஆம் ஆண்டு மே 10ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. அ. ரகுமான் கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பொது இடங்களில் வைக்கப்படுகின்ற விளம்பரங்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்குமேயானால் அப்படி இடையூறு விளைவிப்பவர்களை தண்டிப்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அடுத்து, ஒருவருடைய வீடுகளிலோ அல்லது கட்டிடத்திலோ அதன் அழகைக் குலைக்கின்ற விதத்திலே யாராவது ஈடுபடுவார்களேயானால் அவர்களை தண்டிக்கிற விதத்திலேயும், அதே நேரத்திலே அந்த 'ஆக்குபையரோ' அல்லது 'ஓனரோ' அல்லது அந்தக் கட்டிடத்தினுடைய நிர்வாகத்தில் இருப்பவருக்கு அந்த மாதிரி அழிவை செய்தவர்—டிஸ்பிகர்மென்ட் செய்தவர் நஷ்ட ஈடு தரவேண்டும் என்ற ஒரு புதிய ஷரத்தை உள்ளடக்கி இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இதில் நான் முக்கியமாக அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு கேள்வி, என்னுடைய பெயரை பயன்படுத்தி ஒரு போஸ்டர் அடித்து ஒரு கட்டிடத்தில் அவர் அதை ஒட்டியோ அல்லது என் பெயராலே ஒரு கட்டிடத்தினுடைய அழகைக் குலைக்கின்ற காரியத்தை ஒரு போஸ்டர் ஒட்டியதன் மூலமாகவோ அல்லது வேறு கோஷங்கள் எழுதியதன் மூலமாகவோ செய்து விட்டால் நான் தண்டனைக்கு உரியவனாக ஆக்கப்படுகின்ற ஒரு அபாயம் இருக்கிறது. ஆகையினாலே இந்த நிலையில் இந்தச் சட்டம் என்ன சொல்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது, இதிலே கமிட்டி ஒன்று போடப்படுகிறது. உதாரணமாக இங்கே இருக்கக்கூடிய சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் டெபுடி கமிஷனர் அவர்களை, அதைப்போல் 2 பெண்கள், மற்றபடி நான் அபிஷ்யல் என்று அரசாங்கம் பார்த்து சில உறுப்பினர்களை போடுகிறார்கள்.

(இரவு 7.20)

இவர்களைக் கொண்டதுதான் கமிட்டி. இந்த கமிட்டி பார்த்து பொது இடத்தில் வைக்கப்பட்டு இருக்கக்கூடிய விளம்பரங்கள் பொது இடத்தில் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று அவர்கள் கருதி விடுவார்களானால் விளம்பரங்கள் மறுக்கப்படுகிற நிலமை, தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றன. ஆகவே, இந்த கமிட்டியில் போடப்பட்டு இருக்கின்ற உறுப்பினர்கள் எந்த முடிவுக்கு வருகிறார்களோ அந்த முடிவு ஒரு அரசியல் கண்ணோட்டத்தோடு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற ஒரு சூழ்நிலைக்கு இடம் தந்து விடுமோ என்ற ஒரு ஐயப்பாடு இருக்கிறது.

அதிலே கூட போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்றவிளம்பரங்கள் என்று சொல்லுகிறபோது ஒரு அரசியல் கட்சி ஒரு தலை

வருடைய கட் அவுட்டை ஒரு இடத்தில் வைத்தால் இது போக்கு வரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று சொல்லிநடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு நிலமை ஏற்பட்டுவிடும். ஆனால் நமக்கு வேண்டியவர்கள் ஒருவருடைய கட் அவுடடை வைக்கிற போது அது அவர்களுக்கு போக்குவரத்துக்கு இடையூறாக விளங்கக் கூடியதாக இருக்கிறது என்ற நிலைமை இல்லாமல் போய்விடும். ஆகவே அரசியல் கண்ணோட்டத்தோடு அநீதி விளைவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாது. காரணம் என்ன என்று கேட்டால், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். இப்போது கூட நகராட்சி மன்றங்களில், பஞ்சாயத்து யூனியன்களில் யார் யார் படம் வைக்கப்படவேண்டும் என்று படங்களை மட்டும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அந்த படத்தில் ஔவையார் வந்திருக்கிறாரா என்றால் இல்லை. கம்பர் வந்து இருக்கிறாரா என்றால் கிடையாது. அதிகாரிகளுக்கே ஒரு சந்தேகம் வந்து அமைச்சர் கொடுத்து இருக்கக்கூடிய இன்ஸ்ட்ரக்ஷனில்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேறு, அது வேறு, இதனால் தான் பிரச்சினையே உருவாகிறது.

திரு. அ. ரகுமான்கான் ; பேரவைத் தலைவர் அவர்களே, எதற்கு சொல்லுகிறேன் என்று சொன்னால் இந்த கமிட்டி போக்கு வரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று சொல்லுகிற அபாயத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். அரசியல் விளம்பரங்கள் மற்றவைகள் எல்லாம் இது போன்றபோக்குவரத்துக்கு இடையூறு என்று சொல்லி அரசியல் இயக்கங்களுடைய நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு இது ஒரு கருவியாக பயன்பட்டு விடக்கூடாது என்று எடுத்துச் சொல்லி, காலத்தின் அருமை கருதி, தங்கள் வேண்டுகோளுக்கு இணங்க அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினுடைய நோக்கத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஏற்கனவே, ஆபாச சுவரொட்டிகள், போட்டோக்கள் பல பிரச்சினைகளை இந்த நாட்டில் ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது என்பதும், அதுவும் குறிப்பாக பெண்களை கேலி செய்யக்கூடிய முறையில் உள்ள சுவரொட்டிகள் இன்று ஓட்டி அதனால் பல பிரச்சினைகள் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே ஆபாச சுவரொட்டிகள் தடுக்கப்படவேண்டும். அதற்குத் தகுந்த அளவில் உள்ள சட்டங்களைக்கொண்டு வர வேண்டும் என்று இந்த நாட்டில் மாதர் இயக்கங்கள் கோரிக்கைகளை வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய நேரம் இது என்பதும் நாம் நன்கு அறிவோம்.

ஆனால் இந்தச் சட்டம் உண்மையிலேயே அந்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய முறையில் உள்ள சட்டம் அல்ல. இந்த காரிய காரண விளக்கத்திலே குறிப்பிட்டுள்ளதுபோல இன்று

objectionable advertisements அதை உண்மையிலேயே தடுக்கக்கூடிய முறையிலேயும், அல்லது அதை ஒழுங்குபடுத்தக் கூடிய முறையிலேயும் உள்ள ஓர் முழுமையான ஏற்பாடாக இந்தச் சட்டம் அமையவில்லை. அதே நேரத்திலே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இன்று ஒரு டிராபிக் கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டியினுடைய அனுமதி இல்மாமல் இந்த மாதிரி ஓட்டுநர்களுக்கோ, அல்லது மற்ற மக்களுக்கோ பிரச்சினை ஏற்படுத்தக் கூடிய முறையில் உள்ள சுவரொட்டிகளை ஒட்டக்கூடியவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கிற முறையில் இந்தச் சட்டம் அமைகிறது.

இன்று நமது நாட்டிலே ஒரு மிக முக்கியமான பிரச்சினை பார்க்கவேண்டியது என்ன என்றால், பலஇடங்களிலே அனுமதி இல்லாமலேயே சுவர்களில் இன்று சுவரொட்டிகளை ஒட்டி விட்டு சென்று விடுகிறார்கள். ஆனால் இங்கே சட்டத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், Penalty for Disfigurement by certain categories of unauthorised advertisements without permission என்ற முறையில் போட்டு அந்த மாதிரி ஒட்டக்கூடியவர்களை இன்று தண்டிப்பதற்கு இந்தச் சட்டத்தை கொண்டு வந்து, இருக்கிறார்கள். ஆனால், 'அன் ஆத்தரைஸ்டாக' இந்த மாதிரி ஒட்டி விட்டு செல்லக்கூடியவர்கள் மேல் இன்று கடுமையாக தண்டிக்கப் படக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தை இம்பிளிமெண்டு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

பல இடங்களில் 'ஸ்டிக் நோ பில்ஸ்' என்று போட்டிருந்தாலும் கூட, அதற்கு மேலே கூட இன்றைக்கு விளம்பரங்களை ஒட்டுகிறார்கள். அதே மாதிரி பல இடங்களில் ரோடுகளிலே போடப் பட்டிருக்கின்ற 'நேம் போர்ட்ஸ்' லே கூட இன்றைக்கு விளம்பரங்களை ஒட்டிவிட்டுச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட அன்-ஆத்தரைஸ்டு ஏற்பாடுகளை தடுக்கக் கூடிய முறையில் நடவடிக்கைகள் இன்றைக்கு சட்டப்படி எடுக்கப்படவேண்டும். இன்றைக்கு இந்தச் சட்டம் முழுவதுமாகப் பயன்படுத்தப்பட முடியவில்லை என்றால் அதற்குத் தகுந்த அளவிலே திருத்தங்களை இந்தச் சட்டத்திலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்று ராஜ்ய கமிட்டி போடப்பட்டு இருந்த போதிலும், பெண்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடிய அளவிலே இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் என்ன சுட்டிக் காட்ட விரும்புகிறேன் என்றால் இன்று பெண்களை கேலி செய்யக் கூடிய முறையிலேயே உள்ள ஆபாச சுவரொட்டிகளை தடுக்கக் கூடிய முறையில் சட்டம் கொண்டு வரப் பட வேண்டும். அதற்குத் தகுந்த அளவிலே இதிலே திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அல்லது சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கூறி இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தைத் தொடர்ந்து, இன்றைக்கு வளர்ந்துள்ள சூழ்நிலையில் இந்த விளம்பரம் செய்கின்றவர்கள், அல்லது சுவர்களில் விளம்பரம் செய்கின்றவர்கள். விளம்பர போர்டுகளை வைத்திருப்பவர்கள், இன்றைக்கு அதிகமான எண்ணிக்கையில் பெருகி, கண்ட கண்ட இடங்களில் எல்லாம் இந்த விளம்பர போர்டுகள் மற்றும் விளம்பர சாதனங்கள் எல்லாம் வைத்து, வண்டி ஓட்டுகின்றவர்களுடைய, கவனத்தை ஈர்க்கின்ற வகையிலும், நடைபாதையிலே பிளாட்பாரத்திலே நடந்து செல்கின்ற நடைபாதை வாசிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்ற வகையிலும், இன்றைக்கு இந்த விளம்பர தட்டிகள் அல்லது விளம்பர போர்டுகள் வைக்கப்படுகின்ற முறை வளர்ந்து, தொல்லை கொடுக்கக்கூடிய சூழ்நிலையில், முன்பே இயற்றப்பட்ட சட்டத்தில், அதற்கான நடவடிக்கை எடுத்ததில், சில இடையூறுகள் ஏற்பட்டன என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தச் சட்டத்தினுடைய திருத்த முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனை நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு ரகுமான்கான் வரவேற்றாலும், வழக்கம்போல அவருக்குத் தோன்றிய சந்தேகத்தை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அரசு ஒரு சட்டத்தை அல்லது சட்ட திருத்தத்தை கொண்டுவருகிற போது நல்ல நோக்கத்தில் கொண்டுவருகிறது. இதைப்பற்றி இப்படி நடக்குமா அல்லது அப்படி நடக்குமா என்ற ஐயப்பாடு கொண்டால், அதற்கு எல்லையே இருக்காது. ஆனால் இன்றைக்கு நான் ஒரு சம்பவத்தை அவர்களுக்குச் சொன்னால் இந்த ஐயப்பாடு அவருக்குப் போய்விடும் என்று கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை 1973-74-ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த அரசு முயற்சி எடுத்து, உருவாக்கி, 1975-ஆம் ஆண்டில் இப்படி ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று முடிவு எடுத்திருந்தார்கள். அதற்குப் பிறகு காலமாகிவிட்ட காரணத்தினாலோ, சட்டமன்றம் கூடாத சூழ்நிலையிலோ இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படாமல் தடுக்கப் பட்டிருக்கிறது அல்லது நின்று போய்விட்டிருக்கின்றது. அன்றைக்கு எடுக்கப்பட்ட முடிவுகளை யொட்டித்தான் இந்தச் சட்ட திருத்த முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்கு இந்த ஐயப்பாடு போய்விடும் என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் யார் ஒட்டுகிறார்கள் அல்லது என் பெயராலே யாராவது ஒட்டினால் எப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அதற்குப் பிறகு விவாதத்திலே சட்ட முன்வடிவிலே, எல்லாம் இந்த சந்தேகத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். மதுவிலக்கு திருத்த சட்ட முன்வடிவிலே கூட என்னுடைய காரிலே யாராவது எடுத்துக் கொண்டு போனால் என்று தொடங்கினார்கள். இப்போது இப்படி பொதுமக்களுக்கு அல்லது பயணிகளுக்கு, கார் ஓட்டுகின்றவர்களுக்கு, நடை பாதையில் செல்கின்றவர்களுக்கு துன்பத்தை விளைவிக்கின்ற முறையில்

விளம்பரங்களுக்கு ஏற்பாடு செய்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் அல்லது விரும்பத்தகாத முறையிலே அந்த வீட்டினுடைய அழகை கெடுக்கின்ற வகையிலே சுவர்களிலே எல்லாம் அப்படி விளம்பரங்கள் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னால்-என்னுடைய பெயர் என்று அவர் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய பெயரால் யாராவது செய்தால் என்ன கதி என்று கேட்டார்கள்.

(இரவு 7—30)

ஆகவே, நாம் நல்ல எண்ணத்தோடு, நல்ல முயற்சிகளை மேற்கொள்கிறோம். அப்படிப்பட்ட ஐயப்பாடுகள் இங்கே தேவை இல்லை. நாம் எல்லோருமே சேர்ந்து இந்த அழகைப் பாதுகாக்கின்ற, சூழ்நிலையைப் பாதுகாக்கின்ற, திறந்தவெளிகளை, நல்ல கண்காட்சியோடு பாதுகாக்கின்ற முறையிலே அந்த முயற்சியிலே நாம் ஈடுபடுவோம். இங்கே போடப்படுகின்ற அந்தக் குழுவிலே கூட யார் இருப்பார்கள், எப்படி முடிவு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதிகாரிகள் பொறுப்பிலே விட்டுவிட்டால் அவர்கள் இஷ்டத்திற்கு எதையாவது செய்வார்கள் என்று தான் அதிகாரிகள் அல்லாத ஒரு குழுவைப் போடுகிறோம். அதிகாரிகள் அல்லாத குழுவைப் போட்டாலும் அதற்கும் நாம் ஐயப்பட்டால், அதற்கு நாம் எங்கே போவது?

ஆகவே, இருக்கின்ற நம்முடைய நடைமுறைகளை வைத்து, நம்மிலே இருக்கிறவர்களை வைத்துத் தான் இதை எல்லாம் நிறைவேற்ற இருக்கிறோம். ஆகவே, நம்பிக்கையோடு, இந்தச் சட்டத் திருத்த முன் வடிவை நிறைவேற்றித் தாருங்கள். நம்பிக்கையோடு நாம் இந்தக் காரியத்திலே ஈடுபடுவோம் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

1986 மே 13]

பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு-3. சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In clause-3, in the proposed new section 3-A(1) for the words" "One thousand Rupees" occuring at the end *substitute* the words "Five Thousand Rupees".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று தோல்வி யுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 4 முதல் 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைக் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 39/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

பேரவைத் பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (14—5—1986) காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7—33 மணிக்கு ஒத்திவைக்கப் பற்றது.